**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 58/2009</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஐனவரி மாதம் 21** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **21.01.2026** |
| **பெயர்** | **செல்வம்** |
| **த/பெ** | **தண்டபாணி** |
| **சாட்சி** | **PW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.38.a.m**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. வாதிகள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் பக்கத்து வீட்டுக்காரர்கள். நான் எடப்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். அந்த கிராமத்தில் தான் நான் வசிப்பதாக ஏதேனும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதார் அட்டை சமர்பித்துள்ளேன். நான் வசிக்கும் வீடு என்ன வகைப்பாடு என்றால் மேய்க்கால் புறம்போக்கு. வாதி வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. 3ம் வாதியின் வீட்டின் சர்வே எண் தெரியும் சர்வே எண் 333/1.

2. 1ம் ஐட்டம் சர்வே எண் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. 1ம் ஐட்டம் சொத்தில் தான் 1மற்றும் 2 ம் வாதிகள் வீடுகட்டி குடியிருந்தார்கள் என்றால் சரிதான். 1ம் ஐட்டம் சொத்து எவ்வளவு செணட் இருக்கும் என்றால் 10 செண்ட் இருக்கும் அதில் வீடு 2 செண்ட். 2ம் வாதியான பாலன் 1ம் வாதிக்கு தனக்கு 2 செண்ட் நிலத்தில் தான் உரிமை உள்ளது

என்று 1ம் வாதிக்கு எழுதிய செட்டில்மெண்ட் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதன் அடிப்படையில் 10 செண்ட் என கூறினேன் என்றால் என்னுடைய நிலம் 10 செண்ட் அதே அளவு தான் வாதியின் நிலமும் இருக்கும்.

3. அந்த 10 செண்ட் நிலத்தில் கிழக்கு புறமாக 5 செண்ட் நிலத்தில் 1ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல. மேற்சொன்ன 5 செண்ட் நிலத்தில் 1ம் பரதிவாதிக்கு தான் உரிமையை காட்டும் வகையில் அவர் அந்த நிலத்திற்கு பி மேமோ வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. வாதி 10 நான் கூறும் செண்ட் நிலத்திற்கு உரிமையை காட்டும் வகையில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், வாதிக்கு சாதகமாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வீட்டிற்கு அருகில் வசிப்பதாமல் அவர்களுக்கு சாதகமாக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 11.48.a.m.**